**பிப்ரவரி – 26**

# TNPSC துளிகள்

- திருவான்மியூர் அரசுப் பள்ளியில் பிப்ரவரி 25-ம் தேதியன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் காலை உணவுத் திட்டத்தை தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் துவக்கி வைத்தார்.
  - நகரத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலை உணவை வழங்கிடுவதற்காக சென்னை மாநகராட்சியானது அக்சயப் பாத்திரா எனும் அரசு சாராக் குழுவுடன் கைகோர்த்துள்ளது.
- இந்திய விவசாய ஆராய்ச்சி மையத்தின் உவர்நீர் மீன்வளர்ப்புக்கான மத்திய நிறுவனம் சென்னை பட்டினப்பாக்கத்தின் நம்பிக்கை நகரில் மீன்கழிவு சுத்திகரிப்பு மையத்தைத் துவக்கியிருக்கின்றது.
  - இது நம்பிக்கை நகரில் உள்ள சுய உதவி குழு ஒன்றின் மூலம் இயக்கப்படும்.
- ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் பிப்ரவரி 17-ம் தேதியன்று தொடங்கிய 2019 ஆம் ஆண்டுக்கான சர்வதேச வருடாந்திர பாலைவனத் திருவிழாவின் 40-வது பதிப்பு நடைபெற்று முடிந்தது.
  - இந்த 3 நாள் திருவிழா கட்சிசார் ஏரிக் கோட்டையிலிருந்து ஒரு வண்ணமயமான ஊர்வலத்துடன் ஆரம்பித்தது. இவ்விழா பாலைவன மாநிலத்தின் செழிப்பான கலாச்சார புராதனத்தைக் கோடிட்டுக் காண்பிக்கின்றது.
- 2022 ஆம் ஆண்டில் மேகாலயாவில் நடத்தப்பட இருக்கும் தேசிய விளையாட்டுக்களுக்கான சின்னமாக மேகாலயா மாநில விலங்கான பெரிய புள்ளிச் சிறுத்தையானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பெல்ஜியத்தைச் சேர்ந்த எலிஸ் மெர்டென்ஸ் என்ற வீராங்கனை இத்தாலியின் சிமோனா ஹலேப்பைத் தோற்கடித்து தனது வாழ்நாளின் மிக உயர்ந்த பதக்கத்தைத் கைப்பற்றி உள்ளார்.
- ஆஸ்திரேலியாவின் தடுப்புக் காவல் முகாமில் நான்கு வருடங்களை கழித்த சூடானின் ஒரு அகதி ஆர்வலரான அப்துல் அஜிஸ் முகமத், புகலிடம் நாடுபவர்கள் மீதான ஆஸ்திரேலிய அரசின் மிகக் கடுமையான கொள்கையின் தீவிரத்தை வெளிப்படுத்திக் காட்டியதற்காக சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் மார்ட்டின் என்னல்ஸ் 2019 எனும் ஒரு சர்வதேச மனித உரிமைகள் விருதை வென்றிருக்கின்றார்.
- ஒடிசாவின் கலிங்கா மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் நேபாளத்தை 3-1 என்ற கணக்கில் வீழ்த்தி பெண்களுக்கான சர்வதேச கால்பந்து சுற்றுப் பயணத்திற்கான ஹீரோ தங்கக் கோப்பையை மியான்மர் வென்றது.
- நாக்பூரில் ரஞ்சி சாம்பியனான விதர்பா அணியானது ரெஸ்ட் ஆப் இந்தியா அணியை வீழ்த்தி கிரிக்கெட் விளையாட்டில் இரானிக் கோப்பையைத் தக்க வைத்துக் கொண்டது. மும்பை மற்றும் கர்நாடக அணிகளையடுத்து தொடர்ச்சியாக இரண்டு இரானிக் கோப்பைகளை வென்ற 3-வது அணியாக தற்போது விதர்பா அணி உருவெடுத்திருக்கின்றது.
- அசாமின் கௌஹாத்தியில் நடைபெற்ற 83-வது யோனக்ஸ் சன்ரைஸ் சீனியர் பேட்மிண்டன் தேசியப் போட்டியில் பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் P.V. சிந்துவை வீழ்த்தி சாய்னா நேவால் தனது பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.

# தேசியச் செய்திகள்

## தேசிய போர் நினைவுச் சின்னம்

- இந்தியாவின் முதலாவது தேசிய போர் நினைவுச் சின்னத்தை டெல்லியின் இந்தியா கேட் அருகே பிரதமர் திறந்து வைத்தார்.



- இந்த நினைவகம் இந்தியப் பிரிவினையிலிருந்து இந்நாள் வரை நாட்டைப் பாதுகாப்பதற்காக தங்கள் இன்னுயிரை ஈந்த நமது துணிச்சலான இராணுவ வீரர்களின் நினைவிற்காக கட்டப்பட்டிருக்கின்றது.


## தேசிய நீர் விருதுகள் 2018

- மத்திய நீர்வளத் துறை, நதி மேம்பாடு, கங்கை புனரமைப்புத் துறை மற்றும் சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை, கப்பல்துறை அமைச்சர் நிதின் கட்காரி புதுதில்லியில் தேசிய நீர் விருதுகளை 14 பிரிவுகளில் வழங்கினார்.
- சிறந்த மாநிலத்திற்கான பிரிவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் தேசிய நீர் விருதுகளை முறையே மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களுக்கு வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு பின்வரும் பிரிவில் 9 விருதுகளை வென்றுள்ளது.

| Category | Place | Winners |
|---|---|---|
| Best Education/Mass Awareness efforts | 1 | Isha Foundation- Rally of Rivers, Coimbatore |
| Best Medium & Small-Scale Industry for Industrial Water Conservation | 1 | KGFL, Erode |
| Best District-Rejuvenation/Creation of water Bodies (South Region) | 1 | Madurai District |
| | 3 | Sivgangai District |
| Best Municipal Corporation | 2 | Tharangambadi Town Panchayat, Nagapattinam |
| Best Resident Welfare Association (RWA) | 2 | Jains Green Acres Flat Owner's Association, Zamin Pallavaram, Chennai. |
| Best Municipal Corporation | 3 | Manalmedu Town Panchayat, Nagapattinam District. |
| Ground Water Recharge | 3 | Madurai District |
| Best District Revival of River | 3 | Tirunelveli District |

## அணைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த நிதி


- அடுத்த 10 வருடங்களில் 18 மாநிலங்களில் இருக்கும் 733 மிகப்பெரிய அணைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த இந்தியாவிற்கு உலக வங்கி 11000 கோடிகள் அளிக்க அங்கீகாரம் அளித்துள்ளது.
- இந்த நிதி செயல்பாட்டு நடவடிக்கை, பராமரிப்பு மற்றும் அவசர செயல் திட்டங்கள் ஆகியவற்றோடு தற்போது செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் உபயோகப்படுத்தப்படும்.




- இத்திட்டம் அணைகளில் சுற்றுலாத் துறை, மீன்வளம், நீர்நிலை பொழுதுபோக்கு, சூரிய மற்றும் நீர்மின்சக்தி போன்ற நடவடிக்கைகள் மூலமாக வருவாய் உருவாக்குதல் மீதும் கவனம் செலுத்தும்.

## முழுவதும் குவிமாடம் கொண்ட இந்தியாவின் முதலாவது முப்பரிமாண டிஜிட்டல் அரங்கம்

- முழுவதும் குவிமாடம் கொண்ட இந்தியாவின் முதலாவது முப்பரிமாண டிஜிட்டல் அரங்கமானது கொல்கத்தாவில் அறிவியல் நகரத்தில் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் மகேஷ் சர்மாவால் துவங்கி வைக்கப்பட்டது.
- இதற்கு மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தால் முழுவதுமாக நிதியளிக்கப்பட்டது.
- பார்வையாளருக்கு ஒரு முழுமையான அதிவேக அனுபவத்தை அளிப்பதற்காக 23 மீட்டர் உயரமுடைய குவிமாடத்தைக் கொண்டுள்ள முதலாவது இவ்வகையிலான அரங்கம் இந்தியாவில் இதுவேயாகும்.




- அரங்கிற்கு வரும் ஏழை மற்றும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் திரைப்படத்தை இலவசமாக கண்டு களிக்க அனுமதிக்கப்படுவர்.

# சர்வதேசச் செய்திகள்

## வெலாயத் 97 கடற்படைப் பயிற்சி

- உலகளாவிய முக்கிய கப்பல் பாதை உள்பட பாரசீக வளைகுடாவிலும் இந்தியப் பெருங்கடலிலும் மூன்று நாட்கள் நடத்தப்படும் வெலாயத் 97 எனும் கடல்படைப் பயிற்சியை ஈரான் நிறைவு செய்திருக்கின்றது.
- இந்த பயிற்சி ஏறக்குறைய 2 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் ஹார்மஸ் ஜலசந்தி, மக்ரான் கடற்கரை, ஓமன் கடல் மற்றும் இந்தியப் பெருங்கடலின் வடக்குப் பகுதி ஆகிய இடங்களில் நடந்தது.
- இப்பயிற்சி ஈரானின் நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்க் கப்பல்கள், வானூர்திகள் மற்றும் ஆளில்லா விமானங்களின் திறனை பறைசாற்றியது.
- ஹார்மஸ் ஜலசந்தியில் நடைபெற்ற பயிற்சியின் போது முதல்முறையாக ஈரான் காதிர் வகை நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஒரு கடல் ஏவுகணையை ஏவியது.

## சியோல் அமைதிப் பரிசு

- பிரதமர் நரேந்திர மோடி தென் கொரியாவில் சியோல் அமைதிப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- சியோல் அமைதிப் பரிசைப் பெறும் ஒரே இந்தியர் மோடி மட்டுமே ஆவார்.
- இவ்விருது உலகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும் சர்வதேச ஒத்துழைப்பிற்காகவும் அவர் அளித்த பங்களிப்பிற்காக அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.
- 200000 அமெரிக்க டாலர் பரிசுத் தொகை கொண்ட இவ்விருதை பெறும் 14-வது நபர் இவராவார். இவர் அப்பரிசுப் பணத்தை நமாமி கங்கைத் திட்டத்திற்கு அளித்து விட்டார்.

### *சியோல் அமைதிப் பரிசு*

- 1990 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சியோல் அமைதிப் பரிசு கொரியத் தீபகற்பத்திலும் மிஞ்சியுள்ள உலகத்திலும் அமைதிக்காக ஏங்கும் கொரிய மக்களின் ஆசைக்கு வடிவம் கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்.





- இது கொரியக் குடியரசின் சியோல் நகரத்தில் நடைபெற்ற 24-வது ஒலிம்பிக் போட்டிகளின் வெற்றியை அனுசரிப்பதற்காக ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வளிமண்டல நீர் உற்பத்தி

- ஏரோ இந்தியா 2019 நிகழ்ச்சியில் பாரத் மின்னணு நிறுவனம் உலகம் முழுவதும் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே வரும் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு புதுமையான தீர்வாக வளிமண்டல நீர் உற்பத்திக் கருவியை அறிமுகப்படுத்தியிருக்கின்றது.




- இதனை வளிமண்டலத்தில் உள்ள ஈரப்பதத்திலிருந்து நேரடியாக நீரை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.
- இது வளிமண்டலத்தில் உள்ள ஈரப்பதத்தில் இருந்து நீரைப் பிரித்தெடுத்து அதை தூய்மையாக்கிட ஒரு புதுமையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.
- இது சுத்தமான, பாதுகாப்பான மற்றும் தூய்மையான பருகத் தகுந்த குடிநீரை உற்பத்தி செய்வதற்காக வளிமண்டல அழுத்தத்தைத் திரவமாக்குவதற்கு வேண்டி வெப்ப பரிமாற்றிகளைப் பயன்படுத்துகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பாதுகாப்புப் பகுதிகள்

- மத்திய அரசு தனது 2017-2031 ஆண்டுகளுக்கான தேசிய வனவுயிர் செயல் திட்டத்திற்காக 106 கடலோர மற்றும் கடல்பகுதிகளை பாதுகாப்புப் பகுதிகளாக அடையாளம் காட்டியிருக்கின்றது.
- இது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பருவநிலை மாற்றத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்ட மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் இரண்டாவது ஈராண்டுகளுக்கு ஒருமுறையிலான மேம்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## முக்கிய மந்திரி யுவ சுவாபிமான் யோஜனா

- மத்தியப் பிரதேச அரசு தனது தனித்துவ திட்டமான முக்கிய மந்திரி யுவ சுவாபிமான் யோஜனாவை ஆரம்பித்து வைத்தது.
- இது ஒவ்வொரு வருடமும் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த நகர்ப்புற இளைஞர்களுக்கு 100 நாட்கள் வேலை வாய்ப்பை உத்தரவாதப் படுத்துகின்றது.
- இளைஞர்கள் ஒவ்வொரு மாதமும் 4000 ரூபாய் உதவித் தொகையும், ஒட்டுமொத்த 100 நாட்களுக்கும் சேர்த்து 13,500 ரூபாய் தொகையும் வழங்கப்படுவர்.
- இந்த காலகட்டத்தில் இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுவதன் மூலம் அவர்கள் தனிச் சுதந்திரமுடையவர்களாக திகழ்வர்.

- இத்திட்டம் ஆண்டிற்கு 2 லட்சத்திற்கும் குறைவாக ஆண்டு வருமானத்தை கொண்ட குடும்பங்களைப் பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகத்தினர் என நிர்ணயம் செய்கின்றது.
- இது 21 முதல் 30 வயது கொண்ட இளைஞர்களுக்கு என்று கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இயற்கையின் எதிர்காலம் விருது

- கடல் பாதுகாப்பிற்கான தனது செயலுக்காக உலக இயற்கையின் எதிர்காலத்திற்கான விருதினைப் பெறும் இரண்டாவது இந்தியர் மற்றும் முதல் பெண்மணியாக டாக்டர் திவ்யா கர்னாட் உருவெடுத்துள்ளார்.
- இவ்விருதினைப் பெற்ற மற்றுமொரு இந்தியர் டாக்டர் சாருதத் மிஸ்ரா ஆவார்.
- இவ்விருது ஒவ்வொரு வருடமும் மூன்று நபர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வருடம் திவ்யாவைத் தவிர பிரேசிலின் பெர்ணான்டா ஆப்ராவும், ருவாண்டாவின் ஒலிவியர் செங்கிமனாவும் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.




- இயற்கையின் எதிர்காலம் என்ற அமைப்பால் வழங்கப்படும் 2019 ஆம் ஆண்டிற்கான இயற்கையின் எதிர்காலத்திற்கான விருது வன விலங்குகள் மற்றும் தாவர இனங்களைப் பாதுகாப்பதில் புரிந்த உணரத் தகுந்த சாதனைகளைக் கொண்டாடுகின்றது.

## அகாடமி (ஆஸ்கார்ஸ்) விருதுகள்

- மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் மற்றும் சயின்சஸ் அகாடமியால் (Academy of Motion Picture Arts and Sciences - AMPAS) வழங்கப்பட்டு ஆஸ்கார்ஸ் என்று பொதுவாக அறியப்படும் 91-வது அகாடமி விருதுகள் 2018 ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படங்களைக் கௌரவித்தது.
- இந்த விழா கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள ஹாலிவுட்டில் இருக்கும் டால்பி திரையரங்கத்தில் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 24-ம் தேதியன்று நடத்தப்பட்டது.
- 24 பிரிவுகளில் அகாடமி விருதுகளை அந்நிறுவனம் (AMPAS) வழங்கியது.

- 2018 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆவணப்படம் (குறுகிய பொருள்) என்ற பிரிவில், தமிழ்நாட்டின் அருணாச்சலம் முருகானந்தம் நடித்த உத்திரப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட திரைப்படமான "Period. End of Sentence" எனும் இந்திய ஆவணப்படம் அகாடமி விருதை வென்றிருக்கின்றது.
- சில முக்கிய வெற்றியாளர்கள் பின்வருமாறு

| Category | Winners |
|---|---|
| **Best Picture** | Green Book |
| **Best Actress** | Olivia Colman |
| **Best Actor** | Bohemian Rhapsody |
| **Best Animated Feature Film** | Spider-Man: Into the Spider-Verse |
| **Best Documentary** | Period. End of Sentence |

- - - - - - - - - - - - - - -